செ.வெ.எண். 713 நாள். 29.8.2008

Revised

செய்தி வெளியீடு

வேலூர் மாவட்டத்திலுள்ள கலவை மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள சூரமங்கலம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைத்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 12.5.2008 – அன்று, தமிழக சட்டமன்றப் பேரவையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கையின் மீது பதிலளிக்கையில் அறிவித்த அறிவிப்பின்படி, வேலூர் மாவட்டம், கலவை மற்றும் சேலம் மாவட்டம் சூரமங்கலம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைத்திட, அரசு ஆணை(நிலை) எண்.903 உள்(காவல்–17) நாள்.6.8.2008 மற்றும் அரசு ஆணை(நிலை) எண்.904 உள்(காவல்–17) நாள்.6.8.2008 –ன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க, அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட அரசு ஆணைகளில், வேலூர் மாவட்டம் – கலவை மற்றும் சேலம் மாவட்டம் – சூரமங்கலம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைத்திடுவது தொடர்பாக, நீர்தாங்கி வண்டி மற்றும் அதன் உபகரணங்கள், மரச்சாமான்கள், தொலைபேசி இணைப்பு, பணப்பெட்டி மற்றும் சுவர் கடிகாரம், தலா ரூ.23,25,000/– என்ற அடிப்படையில், மொத்தம் ரூ.46,51,000/– க்கும், நிலையக் கட்டடத்திற்கான மாத வாடகையாக தலா ரூ.15,000/– என்ற அடிப்படையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால், நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தலா – ஒரு நிலைய அலுவலர், முன்னணி தீயணைப்போர், இயந்திரக் கம்மியர் ஓட்டி, தீயணைப்போர் ஓட்டி, தீயணைப்போர் ஆகிய பணியாளர்கள் இந்த தீயணைப்பு நிலையங்களில் பணியமர்த்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9